திருக்க முடியும். தாங்கள் இரண்டாவது கேள்வி கேட்க வேண்டும் என்றால், அதை பின்னால் இருப்பவர்களும் பின்பற்ற முனைவார்கள்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளில் கூட்டம் அதிகமாக இருப்பதால், ஒரு கண்டக்டருக்குப் பதிலாக இரண்டு கண்டக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கூடுதல் பேருந்துகளைப் பற்றியது. கூடுதல் நடத்துனரைப் பற்றியது அல்ல.

Taxi and Auto Drivers demanding excess fares in Madras.

*Q. No. 18: THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware that Taxies and Auto-rickshaws drivers are squeezing passengers at Central Station and Egmore Station in Madras; and

(b) the steps taken to put down this menace?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): சென்னை எழும்பூர் மற்றும் மத்திய இரயில் நிலையங்களில் பிரயாணிகளிடம் அதிக கட்டணம் கேட்கும் சில டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மீது காவல் துறையினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதனை செயல்படுத்துவதற்காகப் போக்குவரத்து இலாகாவில் உள்ள சோதனைக் குழு மோட்டார் வாகன ஆய்வாளர்கள் டாக்சிகளையும் ஆட்டோ ரிக்ஷாக்களையும் திடீர் சோதனை செய்ய வாராந்திர வேலை முறைப் பட்டியல் தயார் செய்கிறார்கள். அதன்படி மோட்டார் வாகன ஆய்வாளர்கள் இரயில் நிலையத்தில் இரயில் வரும் எல்லா நேரங்களிலும் இருந்து டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களின் நடத்தைகளைக் கண்காணிக்குமாறு பணிக்கப் பட்டுள்ளனர்.

டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மீது குறிப்பிட்ட புகார்கள் கொடுக்கப்பட்டால் அதனை பரிசீலித்து ஓட்டுநர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவர் அவர்களே, இப்படி பிரயாணிகளை துன்புறுத்தும் நிலைமை சென்னை எழும்பூர் மற்றும் மத்திய ரயில் நிலையங்களில் எல்லாம் இருப்பது முற்றிலும் உண்மை. சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால்கூட

1983 சனவரி 27]

டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் வர மறுக்கிறார்கள். இன்று காலையில் கூட ரயில் நிலையத்தில் அவ்வாறு எனக்கு எந்த வாகனமும் கிடைக்கவில்லை. நான் ஒரு எம்.எல்.ஏ. என்று சொன்னாலும் கூட வர மறுத்துவிட்டார்கள். பிறகு ஒரு போலீஸ்காரரை அணுகி உதவி கேட்டதும், அவர் வந்து உதவி டாக்சி பிடித்து அனுப்பினார்...... (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் விளக்கங்கள் வேண்டாம். டாக்சி கிடைத்தது அல்லவா? போலீஸ்காரர் பிடித்து கொடுத்துவிட்டார் அல்லவா? இன்னமும் இதில் என்ன பிரச்னை. உட்காருங்கள்.

பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஜனதா இன்சூரன்ஸ் திட்டம்.

*வினா எண். 19—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஜனதா இன்சூரன்ஸ் திட்டம் அமுல் நடத்தப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) ஜனதா இன்சூரன்ஸ் திட்டத்தில் சேருவதற்கு 10 முதல் 65 வயதுக்குள்ளானவர்கள் தகுதியுடையவராவார்கள். ஆரம்ப காலத்தில் ஆண்டு சந்தா ரூ.10 வசூலிக்கப்பட்டது. அப்போது மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு நட்ட ஈட்டுத் தொகை ரூ. 10,000 ஆக இருந்து வந்தது. தற்பொழுது வருட சந்தா தொகை ரூ. 12 வசூலிக்கப்படுகிறது. தற்போது விபத்தில் மரணம் அடைந்தாலோ/இரண்டு கண்களும் சேதமடைந்தாலோ/இரு கைகள்/கால்கள் அல்லது ஒரு கால், ஒரு கை மற்றும் ஒரு கண் சேதமடைந்தாலோ ரூ. 15,000 நட்ட ஈட்டுத்தொகை வழங்கப்படுகிறது. தவிர ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் நிரந்தரமாக சேதமடைந்தாலோ ரூ. 7,500 நட்ட ஈட்டுத்தொகை பெற வழிவகையுள்ளது.